**தலைப்பு 285 – கமத்தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 285 – கமத்தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,138.25 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 5,785.70 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தின் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 352.55 மில்லியன் அதாவது 5.74 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 4,057.90 | 3,978.91 | 78.99 | 1.94 |
| மூலதனம் | 2,080.35 | 1,806.79 | 273.56 | 13.14 |
| மொத்தம் | **6,138.25** | **5,785.70** | **352.55** | **5.74** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 02 அமைச்சுக்களால் ரூபா 379.98 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 261.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு அமைச்சினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்தியிருந்ததுடன், மற்றைய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 118.54 மில்லியன் அல்லது 32 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்கான 20.03.02.18 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 220 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 268 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 122 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.18 | 220 | 268 | 48 | 22 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 230.00 | 181.88 | 145.19 | 184.50 | 500.00 | 401.58 |

### 2.3.2 வர்த்தக முற்பணங்கள் கணக்கு

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்தினால் 28502 ஆம் விடய இலக்க வர்த்தக முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 510.00 | 502.75 | 416.00 | 465.76 | 70.00 | 24.12 |

**(ஆ) நிதி விளைவுகள்**

28502 ஆம் விடய இலக்க வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு காணப்பட்டது.

| முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி வளைவு | | | |
|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | |
| | நட்டம் கருதுகோள் கட்டணம் நீங்கலாக | நட்டம் கருதுகோள் கட்டணம் அடங்கலாக | இலாபம் கருதுகோள் கட்டணம் நீங்கலாக | இலாபம் கருதுகோள் கட்டணம் அடங்கலாக |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| விவசாய பண்ணைகளை பராமரித்தல் மற்றும் விதைகள் விற்பனை முற்பணங்கள் கணக்கு | 22.75 | 68.04 | 170.96 | 138.01 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0081/0015/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 17.46 மில்லியனாக காணப்பட்டது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழான 06 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46.96 மில்லியனாக காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/000/00/0001/0046/000 | 1.44 |
| 6000/000/00/0002/0062/000 | 3.72 |
| 6000/000/00/0006/0086/000 | 5.58 |
| 6000/000/00/0013/0029/000 | 9.20 |
| 6000/000/00/0016/0015/000 | 25.40 |
| 6000/000/00/0018/0018/000 | 1.62 |
| மொத்தம் | **46.96** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

கமத்தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு

அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 04 கணக்காய்வு ஐய வினாக்களிற்கு 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக் கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,588,960 ஆகும்.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 01 செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 28 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவினங்களிற்கான தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 304,435 கூட்டுத்தொகையான 04 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

28501 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,429,970 ஆக இருந்தது. அது மொத்தக் கடன் மீதியில் ரூபா 5,423,268 தொகையான மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாக இருந்ததுடன் அது அறவிடப்பட வேண்டிய

மொத்தக் கடன் மீதியில் 37 சதவீதமாக இருந்தது. அந்த நிலுவை கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 112 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,379,540 தொகையான நிலுவையான மீதிகளை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4, 4.2.5 மற்றும் 4.4 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சேவையை கைவிட்டுச் சென்ற 27 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,614,155 தொகையான நிலுவைக் கடன் மீதிகள் 3 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையான காலப்பகுதியைக் கடந்திருந்த போதிலும், அக்கடன் தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிணையாளர்களிடமிருந்தோ வாரிசுகளிடமிருந்தோ அறவிடுவதற்கும் அவ்வாறு அறவிட முடியாதிருந்தால் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 01 வருடம் முதல் 30 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த 27 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 221,356 தொகையான கடன் மீதிகளை தீர்வு செய்வது தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வர்த்தக முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் 28502 ஆம் விடய இலக்க வர்த்தக முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அக் கணக்கு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,120,143 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.7 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 05 முற்பணக் கணக்கு செயற்பாடுகளை கலைக்கும் நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அந்த கலைத்தல் நடவடிக்கைகள் முறையே 1984 மே 23, 1991 திசெம்பர் 11 ஆந் திகதி, 1996 திசெம்பர் 31 ஆந் திகதி, 2000 மே 10 ஆந் திகதி மற்றும் 2003 ஏப்ரல் 09 ஆந் திகதிகளில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தன. இருப்பினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கலைத்தல் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான 04 முற்பணக் கணக்குகளுக்குரிய அங்கீகரிக்கப்படாத திரண்ட செயற்பாட்டு நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 65,842,264 ஆக காணப்பட்டது.

(ஆ) கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கிற்குரிய 15 வருடங்களைக் கடந்திருந்த ரூபா 1,303,832 தொகையான நிலுவையான மீதிகளும், 16 வருட காலப்பகுதியைக் கடந்திருந்த ரூபா 76,157 தொகையான தீர்க்கப்பட வேண்டிய மீதியும் காணப்பட்டன.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 யூன் 04 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | | | | 1 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு | 3 வருடங்களுக்கு மேல் |
| | | | ரூபா | | |
| (i) | கட்டிடங்கள் | 97 | கணிப்பிடப்பட வில்லை | - | 97 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 159 | -மேற்படி- | 06 | 153 |
| (iii) | இயந்திரங்கள் | 745 | -மேற்படி- | 52 | 693 |

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தினால் சில சொத்துக்களை முறையாக வெளித்தர்பிபனருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா | |
| காணி (ஹெக்டேயர்) | தனியார் கம்பனியொன்று | பெற்றுக் கொள்ள முடியவில்லை. | பெற்றுக்கொள்ள முடியவில்லை. |
| | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | 247,692 | -மேற்படி- |

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சொத்து வகை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவனம் | எண்ணிக்கை, அலகுகளின் அளவு | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | |
| (i) | காணி | இலங்கை மஹவலி அதிகாரசபை | கண்டுபிடிக்க முடியவில்லை. | கண்டுபிடிக்க முடியவில்லை | கண்டுபிடிக்க முடியவில்லை. |
| (ii) | கட்டிடங்கள் | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | மாவட்ட செயலகம் அம்பாறை | -மேற்படி- | -மேற்படி- | 2014 ஆம் ஆண்டு முதல் |
| | | இலங்கை மஹவலி அதிகாரசபை | -மேற்படி- | -மேற்படி- | கண்டுபிடிக்க முடியவில்லை. |

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ஓராண்டிற்கு குறைவான காலமாக இருந்து வரும் 676 சந்தர்ப்பங்களுக்குரிய தீர்க்கப்படாதிருக்கும் பொறுப்புக்கள் ரூபா 20,923,355 ஆக இருந்தது.

**3.10 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| (i) 2003 இன் 22 ஆம் இலக்க விதை அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு | - | கட்டளையைத் தயாரித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அதிகாரச்சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டிலிருந்து வரைவாக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கட்டளைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | 1994 இன் 06 ஆம் இலக்க பீடை கொல்லிகள் கட்டுப்படுத்தல் திருத்த அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு | - | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் அதிகாரத்தின் கீழ் அல்லாமல் எந்தவொரு நபரினாலும் பீடைகொல்லிகள் விற்பனை செய்ய முடியாத போதிலும், மீளாய்வாண்டில் இயங்கும் 1,405 விற்பனை நிலையங்களில் 281 வியாபாரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாமல் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை**<br>----------------------------------------- | | | |
| | XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | | 5,655,567 | புலமைப் பரிசில் உடன்படிக்கை நிபந்தனைகள் மீறியதன் பேரில் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கையேடு**<br>--------------------------------------------- | | | |
| | (i) | நிதிப் பிரமாணம் 216 | 7,735,709 | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டு அளவினை மிகைத்து நடவடிக்கை எடுப்பதை தவிர்க்கும் நோக்கில் ஆண்டிற்குரிய செலவினங்களை பிற்படுத்தக்கூடாத போதிலும், நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 06 செலவின விடயங்களுக்குரிய செலவினங்களை மீளாய்வாண்டின் போது தீர்வுசெய்யாமல் அடுத்து வரும் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 509(1) | 139,814,025 | முற்பண நடவடிக்கைகளின் மூலதனச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அளவு குறித்த நிதியாண்டிற்காக திறைசேரியின் பதிவேடுகள் தீர்வு செய்வதற்கு முன்னர் ‘‘பொது வைப்புக் கணக்கு செயற்பாட்டிற்குரிய கணக்கேடுகளில் - பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு’’ செலவு வைக்கும் பொருட்டு திறைசேரிக்கு அறிவித்து செயற்பாட்டிற்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவேட்டில் சொத்தொன்றாக பதிவு செய்து ஐந்தொகையில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 753 | 355,000 | பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் பெறுவனவுக் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி வழங்கல் உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், கன்னொருவ உணவு ஆராய்ச்சி அலகின் மூலம் வழங்கப்பட்ட மின் தராசு மற்றும் 50 பிளாஸ்ரிக் கூடைகளுக்காக மற்றும் பதலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் மூலம் 16 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட விதைகள் மற்றும் ஏனைய திரவியங்களுக்காக பெறுவனவுக் கட்டளைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | | அரசின் பணத்தைப் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர்கள் தாமாக கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612 அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும், தலைமை அலுவலகத்தினதும் பதலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினதும் கன்னொருவ கற்புல செவிப்புல நிலையத்தினதும் உணவு ஆராய்ச்சி அலகினதும் உத்தியோகத்தர்கள் 429 சந்தர்ப்பங்களில் பிணை வைக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. |

**(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

---------------------------------------------

| | | |
|---|---|---|
| 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் | - | அனைத்து அரசசேவை உத்தியோகத்தர்களும் தமது வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், பிபில பூங்கா பயிர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 12 உத்தியோகத்தர்கள் 12 சந்தர்ப்பங்களில் தமது வெளிச் செல்லலை உறுதிப்படுத்தப் படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது |

கண்டறியப்பட்டது.

- பிந்துனுவெவ தேனீக்கள் அபிவிருத்தி பிரிவில் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் (பொருத்தப்பட்ட திகதி முதல்) பொலன்னருவை பிரதி விவசாய பணிப்பாளர் (அனைத்து மாகாண) அலுவலகத்தில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் கைவிரலடையாள இயந்திரங்கள் உரிய செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமையால் மேற்குறித்த சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v) அரச நிதிச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பிரகாரம் பதலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 03 வாகனங்கள் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் கன்னொருவ உணவு ஆராய்ச்சி அலகின் 03 வாகனங்கள் 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.11 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியளிப்புக்களின் கீழ் 21 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்ட உடன்படிக்கைகளின் படி அவற்றின் மதிப்பீட்டுக் கிரயங்களின் மொத்தம் ரூபா 75,008,500 ஆகக் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 60,726,012 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.12 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) அந்தந்த வலயங்களின் காலநிலை நிலைமைக்கு பொருத்தமான வகையில் நெல் இனங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் அவை அந்தந்த பிரதேசங்களில் பயன்படுத்தப்படாதிருந்தமை அண்மைக்கால கணிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றை விவசாயிகளுக்கு இடையே பிரசித்தப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1987 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட BG 300 மற்றும் 1992 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட BG 352 ஆகிய நெல் இனங்கள் மாத்திரம் இதுவரை விவசாயிகளுக்கிடையே பொதுவாக பிரசித்தியடைந்திருந்தன.

(ii) பதலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் உள்ள 1,500 மரங்களுடன் கூடிய தென்னை பயிர்ச்செய்கை மற்றும் பஸ்யால பூங்கா விஞ்ஞான ஆராய்ச்சி பண்ணையில் 610 மரங்களுடன் கூடிய தென்னை பயிர்ச்செய்கையினதும் ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் முறையே 19 மற்றும் 22 தேங்காய்களான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iii) பொலன்னருவை பிரதி விவசாய பணிப்பாளர் (அனைத்து மாகாண) அலுவலகத்திற்குரிய பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நெல், தோடம்பழம், கொய்யா, சோளம், வாழை, கத்தரி மற்றும் தென்னை ஆகிய பயிர்ச்செய்கையில் வெளிக்களத்தில் மாதிரிகளில் நோய் காணப்பட்டமை, மரங்கள் வளர்ச்சியடையாதிருந்தமை, வெளிரியிருந்தமை போன்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) காளான் செய்கை தொடர்பான பயிற்சிகளை வழங்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டில் பஸ்யால பூங்கா விஞ்ஞான ஆராய்ச்சி பண்ணையில் காளான் உற்பத்தி பிரிவொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது நாளொன்றுக்கு 05 மணித்தியாலங்கள் வீதம் 7 நாட்கள் மாத்திரம் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது.

(v) பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கின் கீழ் காணப்படும் 24 பண்ணைகளில் 12 பண்ணைகளில் ரூபா 82,608,551 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(vi) குண்டசாலை அரசின் விதை உற்பத்தி பண்ணையில் அழிவுற்ற பயிர்செய்கைக்குரிய பயிர்கள் உருவாக்கத்திலிருந்து அழிவடையும் வரையில் ஏற்பட்ட செலவினம் மொத்த செலவினத்துடன் ஒப்பிடும் போது 2012/13, 2013/14, 2014/15 பெரும்போகங்களின் போது முறையே 62 சதவீதம், 61 சதவீதம் மற்றும் 60 சதவீதமும் 2012, 2013 சிறுபோகங்களில் முறையே 88 மற்றும் 46 சதவீதமான கூடிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது. பயிர்ச்செய்கை சேதங்களுக்காக தாக்கமளித்த அடிப்படைக் காரணங்கள் என்னவென்பதை ஆராய்ந்து சேதத்தை குறைத்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) ஆராய்ச்சி பண்ணையொன்றாக பெயரிடப்பட்டுள்ள கன்னொருவ உணவு ஆராய்ச்சி பண்ணையால் 2010 ஆம் ஆண்டில் இறம்புட்டான் செய்கைக்குரிய ஒரு ஆராய்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன் 2015 ஆம் ஆண்டில் பப்பாளிச் செய்கை தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சியும் ஆரம்பத்தின் போது வெற்றியளித்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக வேறு ஏதேனும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்நுட்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்கிடப்பட்ட வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிடும் போது பிந்துனுவெவ தேனீக்கள் அபிவிருத்தி பிரிவினதும், பிபில பூங்கா பயிர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினதும், பீடைகொல்லிகள் பதிவாளர் அலுவலகத்தினதும் அம்பறை, ஹம்பாந்தோட்டை, பொலன்னருவ, ஹசலக்க, அநுராதபுரம் மற்றும் மொனறாகலை அனைத்து மாகாண பிரதேசங்களினதும் செயன் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ii) பயிர் பாதுகாப்பு சேவையின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றும் போது மீளாய்வாண்டின் வெளிக்கள விவசாய மாதிரிகளை நடாத்துதல், இலக்கிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மரக்கரி செய்கை தொடர்பாக வெளிக்கள மட்டத்தில் பீடைகொல்லி முகாமைத்துவ முறைமைகள் (IPM) செயற்படுத்துதல், வழிநடாத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன பயிர் பாதுகாப்பு பாதுகாப்பு சேவையின் பிராதன செயற்பாடுகளாக இருந்ததுடன் அதற்குரிய மீளாய்வாண்டின் மாதிரிகள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலை மரக்கறிகள் பயிர்ச் செய்கைக்குரிய மட்டத்தில் 250 விரிவாக்கல் உத்தியோகத்தர்களைப் பயிற்சியளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு உத்தியோகத்தரொருவரும் பயிற்சியளிக்கப்படாதிருந்ததுடன் எந்தவொரு வெளிக்கள பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.13 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

கமத்தொழில் திணைக்களத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் இணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 6 மாதங்களுக்கு மேல் 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 வருடங்களுக்கு க் குறைவு | 3 வருட ங்களுக்கு மேல் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | தேறாத வைப்புக்கள் | 80,104 | 104,349 | 1,958 | 186,411 |
| (ஆ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 585,530 | 639,381 | - | 1,224,911 |
| (இ) | இனங்காணப்படாத வரவு | 157,813 | 764,672 | 35,757 | 958,242 |
| (ஈ) | இனங்காணப்படாத செலவு | 118,571 | 290,709 | - | 409,280 |

### 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**அரசின் கொள்வனவு வழிகாட்டல் செயற்பாட்டிலிருந்து விலகுதல்**

கன்னொருவ பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினதும் குண்டசாலை விதை உற்பத்தி பண்ணையின் விதை உற்பத்தி அலகிலும் ரூபா 4,513,363 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதி அடிப்படையில் 02 நிர்மாண நடவடிக்கைகளுக்குரிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.12, 3, 7.10, 8.9.3, 8.12.2 மற்றும் 8.13.4 ஆகிய வழிகாட்டல்களுக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 3.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிந்துனுவெவ தேனீக்கள் அபிவிருத்தி பிரிவின் மூலம் தேசிய தேனீக் கட்டுப்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 999,846 செலவு செய்து தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.16 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 408 சந்தர்ப்பங்களில் ரூபா 11,585,917 செலவு செய்து பல்வேறு வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்குபெறச் செய்யப்பட்டிருந்த போதிலும், பயிற்சியின் பின்னர் பாடநெறியுடன் தொடர்புடையதல்லாத துறைகளில் கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2014 திசெம்பர் 19 ஆந் திகதி திணைக்களத்தினால் தனியார் வழங்குனர் ஒருவரிடமிருந்து ரூபா 773,450 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 31 இடைப் பயிர்ச்செய்கை இயந்திரங்களில் 08 இயந்திரங்களின் உத்தரவாத காலம் முடிவடைந்ததன் பின்னர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மேலும் 23 இயந்திரங்கள் உத்தரவாத காலம் முடிவடைவதற்கு 10 நாட்களுக்கு குறைந்த காலம் இருக்கும் போது வழங்கப்பட்டிருந்தன.

### 3.17 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 985 | 482 | 503 |
| (ii) | மூன்றாம் நிலை | 308 | 65 | 243 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,691 | 2,658 | 1,033 |
| (iv) | ஆரம்ப நிலை | 6,638 | 5,958 | 680 |
| (v) | ஏனையவை (ஒப்பந்தம்) | 959 | 959 | - |
| | மொத்தம் | 12,581 | 10,122 | 2,459 |